பக்கங்கள்:-15

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 24 | புதன்கிழமை | 09.08.2023 | அதிர்வு 08 |
|---|---|---|---|---|---|

## சிறைச்சாலைகளில் 56 மதகுருமார்கள்!

நாட்டில் 56 மதகுருமார் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நீதி மன்றம், சிறைச்சாலைகள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார். 02▶

# குருந்தூர்மலையில் பொங்கலுக்கு தடை ஏதும் இல்லை என்று உறுதி

## தொல்லியல் திணைக்களம் நீதிமன்றில் வழங்கியது



குருந்தூர் மலையில் சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபடுவதைத் தாங்கள் தடை செய்யவில்லை என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கும் பாதகமாகத் தாங் கள் நடக்க மாட்டார்கள் என்றும் தொல்லியல் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களத்தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி உறுதியளித்துள்ளது.

நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர் மலையில் கட்டடங்களைக் கட்டியமை தொடர்பாக முன்னாள் வடமாகாண சபை 02▶

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டாலேயே தீர்வு சாத்தியமாம்!



## அமைச்சர் பிரசன்ன பிரசங்கம்

**கொழும்பு, ஓகஸ்ட் 09**

**“தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான கதவுகள் திறந்துள்ளன. ஆனால், தமிழ்க் கட்சிகள்தான் குழப்பத்தில் உள்ளன. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அவர்கள் ஒன்றிணைந்து வந்தால்தான் அனைத்துக் கட்சிகளும் இணைந்து மூவின மக்களும் ஏற்கும் தீர்வை வென்றெடுக்க முடியும்.”**

**- இவ்வாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கின்றார்.** 03▶

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை அகழ்வதற்கு நிதி வழங்க அரசு இணக்கம்

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்விற்கு அரசாங்கம் நிதி வழங்க சம்மதித்துள்ளது என காணாமல் போனோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் 03▶



## “மெகா” கூட்டணிக்கு தயாராகிறார் சஜித்?

மொட்டுக் கட்சியில் அதிருப்தியடைந்த எம்.பிக்களை இணைத்துக் கொண்டு பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் ஊடகம் ஒன்று 08▶



## இரகசியம் பரகசியம்

நேற்றுப் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்திய செய்தி ‘முன்னைய கோட்டாபய அரசு போல தற்போதைய ரணிலின் அரசையும் மக்கள் போராட்டத்தினால் துரத்துவதற்கான முஸ்தீபுகள் சில தரப்புகளால் மேற் 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளப்படுகின்றன' என்று கூறப் படும் புலனாய்வு அறிக்கை நாட்டின் புலனாய்வுப் பிரிவினரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளிக்கப் பட்டு இருக்கின்றது என்று வெளியான தகவல்தான்.

அந்த அறிக்கை உண்மையோ, பொய்யோ, அதில் விவகாரம் உண்டோ என்பதற்கு அப்பால் அது மேலும் ஒரு முக்கிய தகவலையும் கொண்டிருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

இத்தகைய அரசு எதிர்ப்பு மக்கள் போராட்டத்தைத் தூண்டி விடுபவர்களில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஒரு முக்கிய தமிழ் எம்.பியும் அடங்குகின்றார் என்று இந்தப் புலனாய்வு அறிக்கை ஜனாதி பதிக்கு சுட்டிக்காட்டி இருக்கின்றது என்பதே அது.

எதிர்க்கட்சிகள் தரப்பில் இருக்கும் தமிழ் எம்.பி. என்றதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான சுமந்திரன் அல்லது மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான சாணக்கியனாக அது இருக்க லாம் என்று அரசுத் தரப்பு உயர் வட்டா ரங்கள் சிலவற்றிடையே பரபரப்பாகப் பேசப்பட்டமையையும் அறிய முடிந்தது.

அதாவது இரகசியப் புலனாய்வு அறிக்கை என்ற பெயரில் அடுத்து வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் சுமந்திரனை அல்லது சாணக்கியனை இலக்கு வைத்து முடக்கும் முயற்சிக்குக் கட்டியம் கூறும் தகவலாகத்தான் இந்த 'இரகசியம்' கசிந்து உள்ளது போலும்.

அரசு இலக்கு வைக்கக் கூடிய அந் தத் தமிழ் எம்.பி. யார்? சுமந்திரனா? சாணக்கியனா?

அது யார் என்றாலும், அப்படி அவர்களில் யாருக்கும் விபரீதம் ஏதும் நேர்ந்தால், இன்றைய நிலையில் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு அது பெரும் பாதிப்புதான்.

சம்பந்தப்பட்டோர் முன்னெச்சரிக்கை யாக இருப்பது மிகவும் நல்லது.

கோட்டா அரசை வீட்டுக்கு அனுப்பிய கொழும்பு காலிமுகத் திடலின் 'அறகலய' போராட்டக்காரர்களோடு தமிழர் தரப்பில் அதிகம் தொடர்பு வைத்திருந்தவர்கள் சுமந்திரனும் சாணக்கியனும்தான்.

ரணிலின் அரசு, தனது சுய அரசி யல் லாபங்களுக்காகத் தரதம்மியம் பார்க் காமல் எதுவரையும் போகக் கூடியது.

ஆக, சுமந்திரன் சாணக்கியன் இரு வரும் ஒன்றுக்கு இரண்டு தடவை எச்சரிக் கையாக இருப்பது நல்லது.

* * *

நேற்று முன்தினம் திருகோணமலை சீனன்குடாவில் பயிற்சியில் இருந்த போது இரண்டு பேருடன் விழுந்து நொறுங்கிய பி.ரி. - 6 ரக விமானம் குறித்துத் திடுக்கி டும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இந்த விமானம் 65 ஆண்டுகளுக்கு முன்னர் 1958 இல் உற்பத்தி செய்யப்பட்ட தாம். 1961 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரம் இதில் பொருத் தப்பட்டிருந்ததாம். இந்த ரக விமானத் தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஆறு விமா னிகளை இதுவரை நாடு இழந்திருப்ப தைச் சுட்டிக்காட்டி, 65 ஆண்டுக ளுக்கு முற்பட்ட இந்தப் பழைய சீன விமா னத்தை இதுவரை தொடர்ந்தும் பறப்புப் பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தவர் யார் என்று சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜெயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

65 ஆண்டுகளாக இந்த விமானத்தை கைவிடாது தொடர்ந்தும் பயிற்சிப் பறப் புகளுக்கு பயன்படுத்தி வந்தமை ஒரு சாதனைதான்....!

* * *

13ஆம் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை ஜனாதிபதி கோரியிருக்கும் நிலையில், அது பற் றிய தமது முன்மொழிவை தமிழர சுக் கட்சியுடனும் சேர்ந்து ஒன்றாக முன்வைப்பதற்கு ரெலோ, புளொட் கட்சிகள் முயற்சிக்கும் என்று நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகியி ருந்தன. ஆனால் நேற்று தமிழரசு கட்சிக்குத் தெரியாமலேயே - தம்பாட் டிலேயே - ரெலோவும் புளொட்டும் தங்களது முன்மொழிவுகளை ஜனா திபதியின் விசேட அதிகாரி ஆசுமார சிங்கவிடம் ஒப்படைத்து விட்டன.

தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து ஒற்றுமையாக ஓர் முன்மொழிவு ஆவ ணத்தை சமர்ப்பிக்க விரும்பிய ரெலோ வும் புளொட்டும் கடைசி நேரத்தில் தமி ழரசை விட்டு விட்டுத் தம்பாட்டிலேயே அந்த முன்மொழிவை முன் வைத்த தற்குக் காரணம் என்ன? காரணம் இன் றிக் காரியம் இல்லை அல்லவா?

தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து ஒன் றாக முன்மொழிவை வைப்பதாயின், அது 'தமிழ் கூட்டமைப்பு'என்ற பெயரி லேயே சாத்தியமாகும். அப்படி அந்தப் பெயரிலேயே ஒரு முன்மொழிவை முன் வைத்தால், அந்தத் தமிழ்க் கூட்டமைப் புப் பட்டியலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பவை இல்லாமல் போய்விடும். அந்த மூன்று கட்சிகளுடனும் சேர்ந்து ரெலோவும் புளொட்டும் 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி' என்ற பெயரில் கண்ட இணக்கத்தை, தமிழரசுடன் சேர்ந்து தமிழ் கூட்டமைப்பாக மாற்றி, தற் போது தமது கூட்டில் தம்முடன் இருக்கும் 3 கட்சிகளையும் உதாசீனப்படுத்துவ தற்கு ரெலோ, புளொட் தலைவர்களான செல்வமும் சித்தரும் விரும்பவில்லை.

அதனால்தான் தமிழரசுக்கும் தெரியா மல் தம்முடைய பாட்டில் 'ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி' என்ற பின்புல பட்டியலோடு அவர்கள் இருவருமே தங் கள் தரப்பு முன்மொழிவுகளைச் சமர்ப் பித்து தமிழரசை ஒதுக்கி விட்டார்கள்.

தமிழரசு கட்சியைப் பொறுத்த வரை 13,தொடர்பான தனது முன்மொழிவைத் தயாரிப்பதற்காக அக்கட்சியின் அரசி யல் குழு நேற்று மாலை கூடும் முறை யில் கூடியது. ஆனால் 13 ஆம் திருத் தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று ஜனாதிபதி உரையாற்ற இருக் கின்றமையால் அவரது கருத்தை உள் வாங்கி, அதற்கான தங்கள் தரப்பு பிரதி பலிப்பாக 13 ஆம் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்கலாம் என்று தமிழரசு அரசியல் குழு தீர்மா னித்திருக்கின்றது. அதனால் ஜனாதி பதியின் இன்றைய பேச்சுக்கு பின்னரே தமிழரசுக் கட்சியின் முன்மொழிவுத் திட்டம் இறுதி செய்யப்பட்டுத் தயாராகும் எனத் தெரிகிறது.

## சிறைச்சாலைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றில் நேற்றைய தினம் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில் -

கொலை, பாலியல் வன்கொடுமை, பாரதூரமான பாலியல் துஷ்பிரயோ கங்கள், நிதி மோசடி மற்றும் புதையல் தோண்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக ளின் அடிப்படையில் மதகுருமார்கள் இவ்வாறு சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இதில் தண்டனை அனுபவிக்கும் மத-குருமாரின் எண்ணிக்கை 34. அதிக அளவிலான மத குருமார்கள் பௌத்த துறவிகள். மேலும் இந்து மதகுருமார்கள் மூவர், இஸ்லாம் மதகுருமார் இருவர் சிறை யில் தண்டனை அனுபவிக்கின்றனர்.

மேலும் சந்தேகநபர்களாக 21 மத குருமார் சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக் கப்பட்டுள்ள மத குருமார்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பௌத்த பிக் குகள். அவர்களின் எண்ணிக்கை 19.

மேலும், சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 19 பௌத்த மதகுருமார்கள் தண்டனை அனுப வித்து வருகின்றனர். இரண்டு பௌத்த மத குருமார்கள் கொலைக் குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். - என அனுராத ஜயரத்ன குறிப்பிட்டார்.

## குருந்தூர் மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் து.ரவிகரனால் முல்லைத்-தீவு பொலிஸில் முறைப்பாடு செய்ததற்கு அமைவாகவே நகர்த்தல் பத்திரம் மூலம் நடைபெற்று கொண்டிருந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதி மன்றில் எடுத்து கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளின் பின் னர் சட்டத்தரணி தனஞ்சயன் கருத்து தெரிவிக்கும் போது கூறியவை வருமாறு:-

பொங்கல் உற்சவம் ஒன்றை ஆதி ஐயனார் ஆலயத்திலே செய்ய முற்பட்ட வேளை தொல்லியல் திணைக்களத்தினா லும், சகோதர மொழி பேசுபவர்களாலும் அது தடுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கடந்த தவணையிலே நாங்கள் கொண்டுவந்தோம்.

அது தொடர்பாக பதிலளிப்பதற் காக தொல்லியல் திணைக்களத் திற்கு தவணை வழங்கப்பட்டிருந்தது. இன்றையதினம் (நேற்று) தொல்லியல் திணைக்களத்தினர் சட்டமா திணைக்களத் தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக தோன்றியிருந்தார்கள்.

அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபடுவதைத் தாங்கள் தடை செய்யவில்லை என்றும், எதிர்காலத்தி லும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. - என்றார்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக கட்டளைக்காக இந்த வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தடம் மாறும் ரணிலார்

கடந்த காலப் படிப்பினைகளில் இருந்து புதிய அரசியல் செய்யக் கிளம்பி இருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரது தற்போதைய அணுகுமுறை கள், அரசியல் நகர்வுகள் அதனைத் துல்லியமாக உணர்த்தி நிற்கின்றன.

பதவியாசையும், அந்தப் பதவியை எட்டுவதற்குக் கிடைத்த வாய்ப்பும் அவரை வழமைக்கு மாறான பாதையில் செல்ல தூண்டியிருக்கின்றன என்பது துலாம்பரமாகத் தென்படும் உண்மை.

இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை கோட்டை விட்டவர் அவர்.

பாரம்பரியமாக மாறி,மாறி அரசு அமைக்கும் இரண்டு பெரிய தேசிய கட்சிகளில் ஒன்றின் அசைக்க முடியாத தலைவராகக் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் இருந்தும், நாட்டின் தலைவராக அவரால் உயர முடியவில்லை என்பது மட்டுமல்லாமல், அவர் கட்சித் தலைவராக இருக்கும்போதே அவரது அக்கட்சி தேர்தல் வாக்கெடுப்பு நடைமுறைகளில் குப்பைக் கூடைக்குள் தூக்கி எறியப்படும் இழிநிலைக்கும் தள்ளப்பட்டது. இவையெல்லாம் கடந்த ஆண்டு ஜூலை வரையான அவரது மோசமான அனுபவப் பாடங்கள்.

அவர் தலைமை வகித்த கட்சியின் பிரதானிகளே அவரது கண்ணுக்கு முன் அவரது கட்சியையும் தலைமைத்துவத்தையும் உதறிவிட்டு, இன்னொரு கட்சியை உருவாக்கிக் கூண்டோடு வெளியேறினார்கள்.

இவ்வளவுக்கும் காரணமாக அமைந்தது எது?

தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் நம்பிக்கைக்குரிய தலைவராக மிளிர்பவரால் மட்டுமே ஜனநாயகத் தேர்தல்களில் மேலெழும்ப முடியும் என்ற யதார்த்தப் புற உண்மைதான் காரணம்.

அத்தகைய பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் ஒப்பற்ற தலைவர் என்ற பிம்பத்தைக் கூட ரணில் விக்கிரமசிங்கவினால் ஏற்படுத்தவே முடியாது, எனவே அவருடன் அணி சேர்ந்து இருப்பதில் அர்த்தமில்லை என்று கருதித்தான், ‘செத்த நாயிலிருந்து உண்ணிகள் கழறுவது போல’ பலரும் அவரை விட்டு விலகினர். ஏன் அவருடன் ஒட்டி இருந்த மற்றும் கூட்டுச் சேர்ந்த சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்கள், பிரமுகர்கள் கூட அவரை வெறுமையில் கைவிட்டு வெளியேறினர். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தது பேரினவாதிகளின் ஒப்பற்ற தலைவர் என்ற பிம்பத்தை ஏற்படுத்த முடியாத ரணிலினால், தெற்கில் அரசியல் ரீதியில் மேலெழவே முடியாது என்ற யதார்த்தக் கருத்தியல்தான்.

அதை உணர்ந்து கொண்டு, இப்போது கிடைத்த இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு தம்மை மாற்றியமைக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

நல்லாட்சி அரசின் காலத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கிய அதிகாரப் பகிர்வை ‘ஏக்கியராஜ்’ என்ற பெயர்க் கட்டமைப்பின் கீழ், சத்தம்சந்தடியின்றி வழங்குவதற்கு தேசிய ரீதியில் இணக்கத்தை ஏற்படுத்திய அவர், இப்போது ஏற்கனவே அரசமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தைக் காட்டி இவ்வளவு குழப்பமும் குசும்புத்தனமும் பண்ணுவதற்கு ஒரே காரணம், பேரினாவாதிகளின் ஒப்பற்ற தலைவராகத் தான் விளங்க முடியும் என்ற பிம்பத்தை ஏற்படுத்துவதற்காகவே. அதன் மூலம் அடுத்த ஜனாதிபதி தேர்தலிலாவது இறுதியில் தாம் வென்று விட வேண்டும் என்று நப்பாசையில்தான்...!

# யாழில் பஸ்ஸுக்கு கல்லெறிந்த பெண்

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸ/க்குக் கல்லெறிந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – அச்சுவேலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸொன்று நேற்று செவ்வாய்க்கிழமை யாழ் நகர்ப் பகுதியில் தரித்து நின்றுள்ளது.

அங்கு நின்ற பெண்ணொருவர் பஸ் மீது கல் வீசித் தாக்கி அதைச் சேதப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்து, விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்று வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு பெட்ரோல் குண்டை வீசி விட்டுத் தப்பி சென்றுள்ளது.

கருகம்பனை பகுதியில் உள்ள அதிகாரியின் வீட்டுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்ற வன்முறைக் கும்பல், வீட்டின் கதவை கொத்தி உடைக்க முற்பட்டதுடன், ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து உடைத்து விட்டு, ஜன்னல் ஊடாக பெற்றோல் குண்டை வீட்டினுள் வீசி விட்டுத் தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொக்குத் தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி ரி.பிரதீபன் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இது தொடர்பான அடுத்த கட்ட விசாரணையை வரும் 10 ஆம் திகதி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்கத்தின் பிரதிநிதிகள் நாளை 10 ஆம் திகதி சந்தேகத்திற்கு இடமான பிரதேசத்தை அளவிட்டு அதற்கான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் அகழ்வுப்பணிக்கான திகதியைத் தீர்மானிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்று கள ஆய்வை மேற்கொண்டு அகழ்வு பணிகளை முன்னெடுப்பதற்கான மதிப்பீடுகளைக் கணிப்பார்கள் என்றும் கூறப்பட்டது.

தொல்பொருள் திணைக்களத்தினர் நாளை சந்தேகத்திற்கு இடமான பிரதேசத்தை நேரில் பார்வையிட்டு அங்கு அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான உத்தேச செலவுத்திட்டத்தை மூன்று வார காலத்தில் நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளனர் என்றும் நீதிமன்றுக்கு நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் குறித்தும், அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் உள்ளன. முதலில் அவர்கள் ஒன்றுபட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் திறந்த மனதுடன் பேச அவர்கள் முன்வரவேண்டும். தீர்வு விடயத்தில் ஜனாதிபதி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றார். அவர் மீது எவரும் குற்றம் சுமத்த முடியாது.” – என்றார்.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் ஓய்வுபெற்ற சார்ஜண்ட்டுக்கு மறியல்!

## ஏறாவூரில் நடந்த சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் 16 வயது சிறுவன் ஒருவனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர் எனக் கூறப்படும் ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

பொலிஸ் சார்ஜண்ட் சம்பவதினமான கடந்த சனிக்கிழமை பள்ளிவாசல் ஒன்றிற்கு சென்ற சிறுவன் ஒருவனை அப்பகுதியில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. அவரைப் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பொலிஸ் சார்ஜண்ட் ஏற்கனவே கடமையாற்றி வந்த காலங்களில் இவ்வாறன சம்பவங்கள் தொடர்பாக வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றி வந்த நிலையில் அண்மையில் ஓய்வு பெற்றவர் எனக் கூறப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவனை பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்

கைது செய்யப்பட்டவர் நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மனைவியைச் சுட்டுக் கொன்ற பின் தற்கொலை செய்த இளம் கணவன்

## நுவரெலியாவில் பரபரப்புச் சம்பவம்

திருமணம் முடித்து எட்டு மாதங்களேயான நிலையில் இளம்குடும்பமான கணவன் மற்றும் மனைவி வீட்டிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மனைவியைக் கணவன் சுட்டுக் கொன்ற பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கருதப்படுகின்றது.

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டி பிராதன வீதிக்கு அருகில் இலக்கம் ஐந்து, டொப்பாஸ் பகுதியில் திங்கட்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

இந்த சம்பவத்தில் திருமணமாகி எட்டே மாதங்களே ஆன எண்டன் தாஸ் (வயது 32) மற்றும் நாதன் ரீட்டா (வயது 32) ஆகியோரே சம்பவ இடத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதை அடுத்து கணவன் மனைவியை சுட்டு கொலை செய்த பின்னர் கணவன் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பின் எண்டன்தாஸின் தாயார் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். அவர் கூறியுள்ளவை வருமாறு:-

"மகன், மருமகள் மற்றும் நானும் தனியான வீட்டில் வசித்து வருகின்றோம்.



திங்கட்கிழமை இரவு எனது மகனுக்கும், மருமகளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது,

நான் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது சமையல் அறையில் பாரிய வெடிப்பு சத்தம் கேட்டது. நான் சமையல் அறைக்குள் சென்று பார்த்தபோது மருமகள் குருதி தோய்ந்த நிலையில் நிலத்தில் விழுந்து காணப்பட்டார்.

மகனிடன் ஏன் எனக் கேட்டப்போது மின்சாரம் தாக்கி கீழே விழுந்து கிடக்கின்றாள், யாரையாவது உதவிக்கு அழைக்குமாறு கூறினார். நான் அயலவர்களை அழைப்பதற்காக வீட்டில் இருந்து வெளியே வரும்போது மீண்டும் ஒரு வெடிப்புச் சத்தம் கேட்டது,

பின்னர் வீட்டினுள் சென்று பார்த்தால் மகனும் குருதி தோய்ந்த நிலையில் நிலத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்து காணப்பட்டனர். - எனத் தாயார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட துப்பாக்கி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. நீதவான் விசாரணைக்குப் பிறகு சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்டப் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

# வாகரையில் பதினைந்து வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்திய 18 வயது இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)

பதினைந்து வயதுச் சிறுமியை 3 மாதக் கர்ப்பணியாக்கிய 18 வயதுடைய இளைஞன் ஒருவரைநேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவுப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 15 வயதும் 8 மாதம் கொண்ட சிறுமி ஒருவரை 18 வயதுடைய இளைஞன் காதலித்து வந்த நிலையில் சிறுமியை அவர் கர்ப்பமாக்கினார் என்க் கூறப்படுகின்றது. இதனால் அவர்கள் இருவரையும் அவர்களது பெற்றோர் ஒன்றிணைத்து வைத்தமையைத் தொடர்ந்து இருவரும் கணவன் மனைவியாகக் குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இது தொடர்பாக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல் பிரகாரம் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயது இளைனுக்கு எதிராகக் கடந்த முதலாம் திகதி பொலிஸ் நிலையத்தில் வர்கள் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து அவர்கள் இருவரும் ஒளிந்திருந்த நிலையில் 18 வயது இளைஞனை நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இளைஞனுக்கு எதிராக சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் மோற்கொண்ட குற்றசாட்டின் கீழ் வழக்குத் தாக்குதல் செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மலையக மக்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் நேற்று நடைபவனி











(பழுவூரான்)

மலையக மக்களின் இலங்கை வருகையின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட - மலையகம் 200" எனும் தொனிப் பொருளில் மாபெரும் நடைபவனியொன்று நேற்று செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இப்பேரணி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஆரம்பமாகி, திருமலை வீதியூடாக மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப் பூங்கா வளாகத்தை வந்தடைந்து.

இதன்போது கலந்து கொண்டோரால் "கட்டாய காணி உரிமை வேண்டும்","மலையகத்திற்கான தனிப் பல்கலைக்கழகம் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்", "மலையகக் கல்வியில் அரசியல் தலையீடு வேண்டாம்", "மலையக மக்களுக்கான உழைப்பின் ஊதியத்தை வழங்கு", "மலையகத் தமிழர் என்ற எங்களுக்கு அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்" - என்பன போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. அது போன்ற வாசகங்கள் கொண்ட பதாதைகளையும் அவர்கள் ஏந்திச் சென்றனர்.

நடைபவனியின் நிறைவில் மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் ஒன்று கூடி, தமது கோரிக்கைகளை உரிய தரப்பினர் நிறைவேற்றிட வேண்டுமென உரத்த குரலில் அவர்க வெளிப்படுத்தினர். அத்தோடு "மலையகம் - 200" பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

# 13ஆம் திருத்த விடயத்தில் இந்திய அரசு தவறி விட்டது!

## தி.மு.க. உறுப்பினர் டி.ஆர்.பாலு நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு



இலங்கையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தச் செய்ய இந்திய மத்திய அரசாங்கம் தவறவிட்டது என தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்று வரும் நிலையில் அதில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பதில் இந்திய அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு பிரதமர் எதுவும் செய்யவில்லை . தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு நடத்தி வருகிறது.

பிரதமர் நரேந்திரமோடி எங்கு சென்றாலும் திருக்குறள், திருவள்ளுவர் பற்றிப் பேசுகிறார் ஆனால் தமிழ்நாட்டிற்கு பிரதமர் எதுவும் செய்யவில்லை

நாடாளுமன்றத்துக்கு பிரதமர் நரேந்திர மோடியை வர வைக்க வேறு வழி இல்லாததால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளோம்.

மசகு எண்ணெய் விலை குறைந்த போதும் பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு ஏன் குறைக்கவில்லை?

160 ஆண்டு கனவுத் திட்டமான சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை பா.ஜ.க. அரசு கிடப்பில் போட்டது ஏன்? காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் நிறைவேற்றப்படாமல் உள்ளது. சங் பரிவார் எதிர்ப்பால் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ரூ.15 லட்சம் கோடிக்கு பட்ஜெட் போடும் மத்திய அரசால், பிரதமர் அடிக்கல் நாட்டிய மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ரூ.2,000 கோடியை ஒதுக்க முடியவில்லை.

இலங்கையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

ரூ.15 லட்சம் அனைவருக்கும் வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்தனர். ஆனால். இதுவரை ரூ.15 கூட தரவில்லை.

பெரும்பான்மை மக்களை வைத்து சிறுபான்மையின மக்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. முன்பு குஜராத்தில் நடந்தது போல இப்போது மணிப்பூரில் நடக்கிறது. - எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# பம்பலப்பிட்டி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; மதுவரித் திணைக்களம் தரப்பில் விளக்கம்




கொழும்பு, பம்பலப்பிட்டி, மரைன் டிரைவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மதுவரி (கலால்) பரிசோதகர் உள்ளிட்ட நால்வர் நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜீப் வண்டி மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு வானொன்றில் தப்பிச் சென்ற போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் ஹெரோயின் போதைப்பொருள் சுற்றிவளைப்பொன்றை மேற்கொள்வதற்காக சென்றிருந்த கலால் திணைக்கள அதிகாரிகளினாலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பதில் ஊடகப் பேச்சாளரும்,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர கூறுகையில் –

முதலில் அந்த பகுதிகளில் வீதி தடைகளை ஏற்படுத்தினோம். பின்னர் அங்கிருந்த சி.சி.டி.வி. கமராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாகக்கொண்டு வானின் இலக்கத்தையும் கண்டறிந்தோம். அதற்கமைவாக வீதித் தடைகளுக்கு வானின் இலக்கத்தை வழங்கினோம்.

அதன்படி வெள்ளவத்தை வீதித் தடை போடப்பட்டிருந்த சோதனைச் சாவடியில. அந்த வானைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதன்போது வானில் நாலவர் இருந்தனர். அதன்பின்னர் நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களில் ஒருவர் கலால் திணைக்களத்தின் பரிசோதகர் என்பதுடன் மற்றையவர்கள் கலால் திணைக்களத்தின் அதிகாரிகள் என அடையாளம் காணப்பட்டது.

அவர்கள் நால்வரும் சிவில் உடையில் இருந்தனர். அவர்கள் கடமைக்கு வருவதாக பொலிஸாருக்கு அறிவிக்க இல்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் ஜீப்பில் பயணித்த நபர் அந்த ஜீப்பை 2 கிலோ மீட்டர் தூரத்தில் விட்டுச் சென்றுள்ளார். அவர் ஓட்டோவில் தப்பிச் சென்றுள்ளார்.– என்றார்.

சம்பவம் தொடர்பில் கலால் திணைக்களத்தின் ஆணையாளர் கபில குமார சிங்க கூறுகையில் –

ஹெரோயின் சுற்றிவளைப்புக்காகச் சென்ற கலால் திணைக்கள அதிகாரிகளே கைது செய்யப்பட்டுள்ளனர். 8 அதிகாரிகள் கொண்ட இரண்டு குழுக்கள் இந்த சுற்றிவளைப்பில் ஈடுப்பட்டனர்.

கிடைத்த தகவலுக்கு அமைவாக போ தைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரிடம் 150 கிராம் ஹெரோயின் கொள்வனவு செய்ததாகத் தகவல் கிடைத்ததையடுத்து சந்தேகநபர்களை கைது செய்வதற்கு முயன்றுள்ளனர்.

இதன்போது ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அங்கிருந்த மற்றுமொரு சந்தேக நபர் வாகனத்தில் தப்பிச் செல்ல முயற்சித்த போது வாகனத்தின் மீது அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளும் போது சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளார். போதைப் பொருளுடன் கைது செய்த அதிகாரிகள் குழு தமது தலைமையகத்திற்கு வருகை தந்துள்ளனர். தப்பிச் சென்ற சந்தேக நபரை கைது செய்வதற்கு முயற்சித்த மற்றைய நால்வர் கொண்ட அதிகாரிகள் குழுவை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் இவ்வாறான சுற்றிவளைப்புகளின் போது துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு எமது திணைக்களத்துக்கு பூரண அதிகாரமுள்ளது. அதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு கலால் அதிகாரிகளையும் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு சந்தேக நபரையும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்ட நீதவான், சந்தேகநபர்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டார்.

## வாதுவ விபத்தில் இளைஞர் சாவு!



வாதுவ கல்லூரி வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் வாதுவ, தல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் எனக் கூறப்படுகின்றது.

இந்த இளைஞர் வாதுவ பாடசாலைப் பகுதியிலிருந்து வாதுவ நோக்கி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியுள்ளார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி 25 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு சுவரில் மோதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழர்களின் பூர்வீக அடையாளங்களை அபகரிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள

# வர்த்தமானி அறிவித்தல்களை மீளப்பெற சிறீதரன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்



புராதனப் பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 188 இன் 16 ஆம் பிரிவின் கீழ், வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களின் நான்கு பூர்வீக மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள 2023.02.01 ஆம் திகதிய 2317/57 ஆம் மற்றும் 2317/58 ஆம் இலக்க, வர்த்தமானப் பத்திரிகை அறிவுறுத்தல்களை மீளப்பெறக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால், ஜனாதிபதிக்கும், துறைசார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2023.08.07 ஆம் திகதியிட்டு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் வதிவிடப் பிரதிநிதி, சர்வதேச நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், யுனெஸ்கோ மனித உரிமைகள் ஆணையகம் என்பவற்றுக்கு பிரதியிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பறாளை முருகன் ஆலயம் உள்ளிட்ட குறித்த நான்கு இடங்களும் இன்றளவும் முறைசார் பூஜை வழிபாடுகள் இயற்றப்படும் தமிழ் மக்களுடைய புராதன மதவழிபாட்டுத் தலங்களாகப் பேணப்பட்டு வரும் நிலையில், எமது மக்களை உணர்வுரீதியான நெருக்கீடுகளுக்கு ஆளாக்கி இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் நோக்கோடு மேற்படி மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழர்களது பூர்வீக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமாகவே தென்படுகிறது.

குறிப்பாக பறாளை முருகன் ஆலய பரிபாலன சபையினரிடமுள்ள 1786 ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணி உறுதியில் அவ் ஆலய வளாகத்தினுள் அரசமரம் இருப்பதாகக் குறித்துரைக்கப்பட்டிராத நிலையில், சூழலியல் நிபுணர்களின் கருத்துக்கமைய வெறுமனே 200 ஆண்டுகளுக்குட்பட்ட பழமையுடைய அவ் அரசமரத்தை, சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறும் சங்கமித்தையின் வருகையோடு பொருத்திக் கூறுவதென்பது வரலாற்றுத்திரிவை ஏற்படுத்துவதாகவும், அப்பட்டமான பொய்மை நிறைந்த கருத்தாகவுமே அமைந்துள்ளது.

ஏற்கனவே, குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை முதல் உருத்திரபுரம் சிவன்கோவில், மயிலத்தமடு மாதவனை, கச்சல் சமளங்குளம் ஈறான நூற்றுக்கணக்கான இடங்கள் தொல்பொருள் எனும் போர்வையில் வலிந்து அபகரிக்கப்பட்டு, அவ்விடங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளும், துறவிமடங்களும், சிங்களக் குடியேற்றங்களும் திட்டமிட்டு நிறுவப்படும் சூழலில், தமிழர்களின் கலாசார மற்றும் மரபுரிமை அடையாளங்களின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாண மண்ணிலுள்ள ஆலயங்களையும் அவற்றின் சுற்றயல் பகுதிகளையும் புராதனச் சின்னங்களாக அடையாளப் படுத்தியிருப்பதை, அவ்விடங்களை முற்றாக பௌத்த மயமாக்கும் சிந்தனையின் ஆரம்ப வெளிப்பாடென்றே கருதமுடிகிறது.

போர்க்கால நெருக்கீடுகள், போரியல் வாழ்வின் இழப்புகள் என்பவற்றில் இருந்து இன்றளவும் மீண்டெழ முடியாத நிலையில், ஈடுசெய் நீதி கூட மறுக்கப்பட்டவர்களாக வாழும் ஈழத்தமிழர்களை, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் தொல்லியல் திணைக்களத்தினதும் அண்மைக்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவே அமைந்துள்ளன.

ஓர் மதவாதச் சிந்தனையின்பாற்பட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்நிலைகளை மேலும் வலுப்படுத்தாது, தமிழர்களையும் இந்த நாட்டின் சகோதர இனத்தவர்களாகக் கருதி, அவர்களது வழிபாட்டுரிமைகளுக்கேனும் மதிப்பளிப்பதன் மூலம் இந்து மற்றும் கிறிஸ்தவ மதச் சின்னங்களையும், தமிழர்களது மரபார்ந்த அடையாளங்களையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை நிரந்தரமாக நிறுத்த இந்த நாட்டின் தலைவராக தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதற்கான நல்லெண்ணச் சமிக்ஞையாக 2023.02.01 ஆம் திகதிய 2317/57 ஆம் மற்றும் 2317/58 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை மீளப்பெற துறைசார் அமைச்சரை அறிவுறுத்துமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

# தூத்துக்குடி - கொழும்பு இடையில் விரைவில் பயணிகள் கப்பல் சேவை

தூத்துக்குடி-கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையைத் தொடங்க, தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு விரைவில் முறைப் படி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதும் பல்வேறு துறைமுகங்களில் இருந்து தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்துக்கு வரும் சரக்குக் கப்பல்கள் மூலம் பல்வேறு பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோல, தூத்துக்குடி மட்டுமன்றி தமிழகம் முழுவதும் இருந்து பல்வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், தூத்துக்குடி துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

சரக்குப் போக்குவரத்தில் ஆண்டுதோறும் வளர்ச்சி கண்டுவந்தபோதிலும், தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து பயணிகள் கப்பல் இயக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்துல்லனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தூத்துக்குடி ஹப் போர்ட் டெவலப்மென்ட் கவுன்சில் தலைவர் ஜே.பி.ஜோ வில்லவராயர் கூறுகையில் -

தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவையை ஆரம்பித்தால், வணிகம் மற்றும் சுற்றுலாவுக்கு ஊக்கம் கிடைக்கும்.

இரண்டு மாதங்களுக்கு முன் இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதிநிதிகள் கப்பல் மூலம் தூத்துக்குடிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆய்வு செய்தனர். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் நாகப்பட்டினம் – காங்கேசன்துறை படகு சேவையை தேர்வு செய்யாமல், மீண்டும் தூத்துக்குடி – கொழும்பு சேவையை ஆரம்பிப்பது குறித்து அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும் என்று தூத்துக்குடி கடலோர இயந்திரமயமாக்கப்பட்ட பாய்மர கப்பல் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ் லொசிங்டன் பெர்னாண்டோ கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகரை பொலிஸ் நிலையத்தில் இரு கான்ஸ்டபிள்கள் கைகலப்பு

## ஒருவர் காயம் மற்றொருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் இரு பொலிஸாருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து ஒருவர் கல்லால் தாக்குதலுக்குள்ளானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பொலிஸ் சாரதியை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதவான் பிணையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை விடுவித்துள்ளார்.

தமிழர்களான – இந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் வாகனச் சாரதிக்கும் இன்னொரு பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் இரு வருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. வாகனசாரதி கல்லால் சக கான்ஸ்டபிள் மீது தாக்குதல் மேற்கொண்டார் எனக் கூறப்பட்டது. காயமடைந்த கான்ஸ்டபிள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தாக்கிய பொலிஸ் சாரதியை கைது செய்யப்பட்டார்.

அவர் வாழைச்சேனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் உடனடியாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையுடன் அவருக்கு எதிராகப் பொலிஸ் ஒழுக்காற்று விசாரணையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளவத்தை குரே பார்க்கில் மோதல் 10 பேருக்குக் காயம்!

கொழும்பு 06 வெள்ளவத்தை குரே பார்க்கில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியின்போதுஏற்பட்டமோதலில்சிறுவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர்.

பொரளையில் உள்ள பாடசாலை ஒன்றுக்கும் மருதானையிலுள்ள பாடசாலையொன்றுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றதாகவும், போட்டியின் பின்னர் மோதல் ஏற்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போட்டியைக் காண வந்திருந்த குழுவினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கற்பிட்டியில் கரை ஒதுங்கிய திமிங்கலம் மீண்டும் கடலுக்கு



புத்தளம் கற்பிட்டி இப்பந்தீவு பகுதியில் 30 அடி நீளமுடைய திமிங் கலம் ஒன்று நேற்றுக் காலை உயிருடன் கரையொதுங்கியது.

கரையொதுங்கிய திமிங்கலத்தைக் கண்ட மீனவர்கள் கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் அது குறித்துத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கற்பிட்டி விஜய கடற்படையினரின் உதவியுடன் அந்தத் திமிங்கலத்தை ஆழமான பகுதியில் விட்டனர் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித் தனர்.

குறித்த திமிங்கலம் Bryce's Whale இனத்தைச் சார்ந்தது என கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "மெகா" கூட்டணிக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்டுள்ள செய்தியில் –

ஒரு சில நாள்களுக்கு முன் மொட்டுக் கட்சியின் முக்கிய எம்.பி. ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்துள்ளார்.

அவருடன் சேர்ந்து 15 எம்.பிக்கள் அரசுடன் அதிருப்தியடைந்திருக்கின்றனர் எனவும், எதிர்க்கட்சியில் இணைவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர் எனவும் சஜித்திடம் தகவல் சொல்வதற்கே அவ்வாறு அவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

"சேர்... உங்களது கட்சியில் இணைய முடியுமா...?" என்று சஜித்திடம் அவர் கேட்டுள்ளார்.

"முடியும். விரைவில் பாரிய கூட்டணி ஒன்றை அமைக்கப் போகின்றோம். அதில் இணையுங்கள். ஏற்கனவே மொட்டில் இருந்து விலகிய 13 எம்.பிக்கள் சுயாதீனமாக இயங்குவதோடு எம்மோடும் சேர்ந்து செயற்படுகின்றார்கள். அவ்வாறு நீங்களும் செயற்பட முடியும்" என்று சஜித் பதிலளித்துள்ளார்.



# நாட்டிலுள்ள இனப்பிரச்சினைகளுக்கு 13 ஆவது திருத்தத்தால் தீர்வு கிட்டாது

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

(இராஜதுரை ஹஷான்)

13 ஆவது திருத்தத்தால் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. புதிய தலைமைத்துவத்தின் ஊடாகவே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

அரசியலமைப்பின் முக்கிய திருத்தமாக உள்ள 13 ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குக் கிடையாது. பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அம்சங்களை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முரண்பட்டதாக உள்ளன.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாளை புதன்கிழமை விசேட உரை நிகழ்த்தவுள்ளார். 13 ஆவது திருத்தத்தின் பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அம்சங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தின் அனுமதி மற்றும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்கிறார்.



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் முக்கியமானதொரு திருத்தமாகும். இந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறைக்கு பொறுப்பாக்குவது ஏற்றுக்கொள்ள கூடியதொரு செயற்பாடல்ல.

13 ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குக் கிடையாது. நாட்டின் அரசியலமைப்பின் பிரதான பேசுபொருளாக உள்ள 13 ஆவது திருத்த விவகாரத்தில் சட்டவாக்கத் துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என முத்துறைகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் செயற்பாடுகள் முரண்பட்டதாக உள்ளன. கடந்த மாதம் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. – என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியால் செயற்பட முடியாது. 13 ஆவது திருத்தத்தால் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. புதிய தலைமைத்துவத்தின் ஊடாகவே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதற்கு மக்களால் பலமான அரசு ஒன்று வெகுவிரைவில் தோற்றுவிக்கப்பட வேண்டும்.– என்றார்.

# திட்டமிட்டுத் தமிழர்களது பிரதேச இடங்களை பௌத்த இடங்களாக்குவது வேதனைக்குரியது

## அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறுதிருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.08

இலங்கையில் உள்ள தமிழர் பிரதேச இடங்களை திட்டமிட்டு பௌத்த இடங்களாக பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது.

இவ்வாறு இந்து சமய சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் கூட்டமைப்பு சார்பாக அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

இலங்கை அரசு திட்டமிட்டு தமிழர்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்களை பௌத்த அடையாள இடங்களாக மாற்ற நினைப்பது மிகுந்த வேதனை தருகிறது. கிழக்கில் திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று சைவ மக்களின் புனித தீர்த்தமாக பலநூறு வருடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட்டன.

சைவசமயத்தை பெரிதும் நேசித்த இலங்கை வேந்தன் இராவணனோடு தொடர்புடைய இப்புனித தீர்த்தம் இன்று தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் அபகரிக்கப்பட்டுள்ளமை அநீதியான செயலாகும். தொடர்ந்து தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்களை திட்டமிட்டு அபகரிக்க நினைப்பது அதர்மச் செயலாகும்.

தற்போது பறளாய் முருகன் கோவிலில் உள்ள அரசமர விருட்சத்தை சங்கமித்தை வரலாற்றோடு தொடர்பு படுத்தி வர்த்தமானி வெளியிட்டுள்ளமை சைவ மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது.

சைவ நிறுவனங்களையோ, வடக்கில் உள்ள பல்கலைக்கழக அறிஞர்களையோ தொடர்பு கொள்ளாமல் தொல்லியல் திணைக்களம் புதிய பிரகடனங்கள் செய்வது கவலையளிக்கிறது.

கீரிமலைப் புனித தீர்த்தக் கேணியைத் திடீரென தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பது மிகவும் தவறான செயலாகும்.

தெல்லிப்பழை கிராம முன்னேற்றச் சங்கம், வல்லிபுரம் என்ற பெரியவரின் நிதியுதவியுடன் 1916ஆம் ஆண்டு தூர்வைக் குளமாக இருந்த இக் கேணியை பொலிகல்லால் கட்டி பாதுகாத்தது. இன்றுவரை வலி வடக்குப் பிரதேச சபை குளத்தைப் பாதுகாப்பதுடன் காவலர்களை நியமித்து கண்காணித்து வருகிறார்கள்.

திணைக்களத்துக்கு உரித்தாக பிரகடனம் செய்திருப்பது நீதியற்ற செயல். எனவே ஜனாதிபதி தொல்லியல் திணைக்களத்தின் மேற்குறித்த பிரகடனங்களை மீளப்பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைவமக்களின் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறது. தாங்கள் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்து ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.– என்றுள்ளது.

# 75ஆவது ஆண்டு பவள விழாவில் சுவர் ஓவியங்கள் திறந்து வைப்பு






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவின் பவள விழாவை முன்னிட்டு இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அனுசரணையில் பாடசாலையின் சுவர்களில் கடந்த இரண்டு மாதங்களாக வரையப்பட்ட ஓவியங்கள் நேற்று (08) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசாலின் வழிகாட்டலில் இந்த ஓவியங்களை வரைவதற்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர்களான எஸ்.இஸட்.எம். ஸ்னூஸ், பி.எம்.றுக்ஸான் மற்றும் ஏ.தாரிக் ஆகியோரின் ஏற்பாட்டில் இவை திறந்துவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.ஸலாம், ஒழுக்காற்றுக் குழுத் தலைவர் ஆசிரியர் எம்.பி.எம். லாபீர், விளையாட்டு பிரிவுப் பொறுப்பாளர் ஆசிரியர் யூ.எல்.எம்.றியால் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.எல்.ஏ.ஹமீட், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம்.ஜிப்ரி, அக்ஸான் இன்ஜினியரிங் வேக்ஸின் பணிப்பாளர் கே.எல்.எம்.அர்ஸாத், பழைய மாணவர்கள் சார்பாக எஸ்.என் ஹஸ்மி, எஸ்.எல்.தன்சில், யூ.கே.லாபிர், எஸ்.எம்.ஹர்னி உட்பட நலன்விரும்பிகள் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# மாணவர் துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

## அதிபர் சரீர பிணையில் விடுவிப்பு

(பாறுக் ஷிஹான்)

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸில் சரணடைந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார் .

குறித்த வழக்கு திங்கட்கிழமை (07) சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ரி. கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இரண்டாவது பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள பாடசாலை அதிபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறும் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ள சந்தேக நபர் கடந்த ஜுலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை துன்புறுத்தலுக்கு உட்படுத்த முயற்சித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கத்திக்குத்துக்கு இலக்காகி பாடசாலை மாணவி காயம்

கொழும்பு, ஓக.08

பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மாணவியை இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் மினிபே-ஹசலக்க,மொறயா பகுதியில் நேற்று (08.08.2023) காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது மாணவி மீது தாக்குதல் நடத்திய இளைஞரை கிராம மக்கள் பிடித்து ஹசலக்க பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த 11 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவி தற்போது மஹியங்கனை ஆரம்ப வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட இளைஞர், தம்புத்தேகம பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய திருமணமாகாதவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவி முகநூல் ஊடாக அந்த இளைஞருடன் அறிமுகமாகி சுமார் ஒரு வருட காலமாக காதல் தொடர்பில் இருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹசலக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் சிக்கிக் காயமடைந்த இளைஞன் உயிரிழந்தார்

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துன்னாலை மத்தி, கோயில் கடவையைச் சேர்ந்த சங்கர் சஞ்ஜீவன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த முதலாம் திகதி இரவு மோட்டார் சைக்கிள் பழக முயன்றபோது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

தலைக்கவசம் அணியாத நிலையில் படுகாயமடைந்த இளைஞர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் (7) உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார்.




# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்றிட்டம்: கிழக்கில் அமுல்படுத்த நடவடிக்கை!

(கே.எ.ஹமீட் )

கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத் தப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்றிட்டங்கள் குறித்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மானுக்கும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர காஞ்சனா விஜேசேகர விற்கும் இடையில் நேற்று (08) விசேட சந் திப்பு மின்சக்கி அமைச்சில் இடம் பெற்றது.

இதன்போது கிழக்கில் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்த இணக்கப்பாடுகள் எட்டப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

### இலங்கையில் இருந்து மருத்துவர்கள் வெளியேறுவதால்

# நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகள் செயலிழக்கும்

### எச்சரித்துள்ளது இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக.08

இலங்கையில் இருந்து மருத்து வர்கள் வெளியேறிவரும் நிலை யில், நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகள் செயலி ழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித் துள்ளது.

இந்த விடயத்தில் உடனடியாக தலையீடு செய்ய வேண்டும் என்ற விடயத்தை நேற்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுட னான சந்திப்பிலும் சுட்டிக்காட் டியதாக அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் செயலாளரான மருத்துவர் ஹரித்த அலுத்கே வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர–

“எதிர்கட்சித் தலைவர் உட் பட, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடன் கலந் துரையாடலை மேற்கொண்டோம்.

அவர்களுடன் வெளிப்படை யாக கருத்துக்களை பரிமாறிக் கொள்ள அரச மருத்துவ அதி காரிகள் சங்கத்துக்கு வாய்ப்புக் கிடைத்தது. விசேடமாக சுகா தாரத்துறையில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து எடுத்துரைத் தோம்.

மருந்து பற்றாக்குறை, மருந்து களின் அளவு தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினை, மருந்து களின் விலை, உபகரணங்க ளின் செயலிழப்பு மற்றும் மருத்துவர்கள் உட்பட சுகா தார துறையினர் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதால் மருத் துவமனைகள் செயலிழக்கும் அபாயம் குறித்து புள்ளிவிப ரங்களுடன் விடயங்களை முன்வைத்தோம்.

விசேடமாக மருத்துவர்களை நாட்டுக்குள் வைத்திருப்பதற்கு துரித வேலைத்திட்டத்தின் தேவைப்பாடு குறித்து எடுத்துக் கூறினோம்.

சுகாதார அமைச்சிடம் இருந்து பெற்ற தரவுகளுக்கு அமைய ஒராண்டுக்குள் ஆயிரத்து 100 இற் கும் அதிகமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த எண்ணிக்கை எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்க லாம். இதனால் மருத்துவமனை களில் செயலிழக்கும் நிலைமை ஏற்படும். ஆகவே இந்த விடயத் தில் உடனடியாக தலையீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது. இது தொடர்பான யோசனையை ஜனாதிபதியிடம் நாம் முன்வைத் துள்ளோம். எதிர்க்கட்சித் தலை வர் உள்ளிட்ட எதிர்கட்சியிலுள்ள அணியிடமும் ஜனாதிபதியிடம் முன்வைத்த யோசனையை சமர்ப்பித்துள்ளோம்.

தற்போதுள்ள நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் எதிர்க்கட்சி என்ற வகையில் அவர்களுக்குள்ள பொறுப்பு மற்றும் தலையீடுகளை மேற்கொள்ளுமாறு நாம் கோரியுள்ளோம்” – என்றார்.

# வேலியே பயிரை மேய்கின்றனவா? விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

### முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அறிக்கை




(ஏ.எல்.எம்.)

மட்டக்களப்பு மாவட் டத்திலுள்ள வளங்கள் மோசடியான முறையில் சூறையாடப்படுகின்றன. இதை நிறுத்துவது யார்? வேலியே பயிரை மேய் கின்றனவா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஈ.பி.ஆர்.எல்.எப்.இரா துறைரெத்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வருடங்களாக மாவட்டத்திலுள்ள வளங்கள் அனைத்தையும் இங்குள்ள ஒருசில ஒப்பந்தக்காரர்களும், சில அதி காரிகளும் குறிப்பாக, மத்தியிலுள்ள 15 வீதத்துக்கு மேற்பட்ட அரசியல் மோசடிக்காரர்கள் ஊடாக மிகவும் மோசமான முறையில சூறையாடி வருகின்றனர்.

அனுமதியற்ற மீன்பிடி, காட்டுமரங்களை வெட்டு தல், ஊத்தமணல் ஏற்றுதல், கிறவல் ஏற்றுதல், மணல் ஏற்றுதல், வடிசாராயம் விற்பனை செய்–தல், ஒருசில ஒப்பந்த வேலைகள். இறால் வளர்ப்பு, முறையற்ற காணி வழங்குதல், முறையற்ற ஒப்பந்த வேலைகளைச் செய்தல், முறையற்ற இடமாற்றம், முறையற்ற நியமனங்கள், சுற்றுச்சூழலை மாச டைய வைத்தல் இது போன்ற வேலைகளைச் செய்து வருகின்றனர்.

இதற்கான பகீரங்க விசாரணைகளைச் செய்வ தற்கு ஏன் மாவட்ட நலன்விரும்பிகள் ஆர்வம் இல்லாமல் உள்ளனர். எவ்வளவோ, திறமையான, நேர்மையான, நல்லொழுக்கமுள்ள, பண்புள்ள, நல்ல விழுமியங்களையும், கொண்டுள்ள பலர் இருந்தும் மோசடிக்கு எல்லையே இல்லாமல் நடந்து கொண்டு வருவது அநாகரிகமான செயல் அல்லவா? வேலியே பயிரை மேய்கின்ற அளவுக்கு நிலைமை உள்ளதால் நாங்கள் என்ன செய்வது என மக்கள் அங்கலாய்கின்றனர். – என தெரிவிக் கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.08.2023



### மேஷம்

இன்று மந்திரங்களை ஜபிப்பதன் மூலம் மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அது உங்கள் மன அழுத்தத் துக்கு மருந்தாக அமையும்.

பணிக்காக உங்களை அர்ப்பணித் துக் கொள்ள வேண்டும். தாமதங்களை தவிர்க்க இன்றைய நாளை நன்றாக திட்டமிடுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும். அதன் மூலம் குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று குறைந்த அளவே பணம் காணப்படும். பெரிய அளவில் முதலீடு செய்வதற்கான எந்த ஒரு முடிவையும் எடுக்காதீர்கள்.

தலைவலிக்கான சாத்தியங்கள் உள்ளன. தியானம் மேற்கொள்வது வலியை குறைக்க உதவும்



### ரிஷபம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக நேர்மைறை ஆற்றலுடன் காணப்படு வீர்கள். நீங்கள் இருப்பதைக் கொண்டு இன்னும் மகிழ்வாக இருக்க முடியும்.

திறம்பட செயலாற்ற பணிகளை திட்ட மிட்டு அட்டவணைப்படுத்த வேண்டியது அவசியம். கவனச்சிதறலுக்கு ஆட்படுவதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சாந்தமான அணுகுமுறை வேண்டும். இது கண்டிப்பாக ஒருவருடன் ஒருவர் மகிழ்ச்சி உணர்வுடன் இருக்க உதவும்.

இன்று பணத்தை கவனமாக கையாள வேண்டும். ஆடம்பரமான வகையில் பணத்தை அதிகமாக செலவு செய்யக் கூடாது.

சளி இருமல் பாதிப்புகள் காணப்படும். எனவே ஆரோக் கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம்.



### மிதுனம்

நீங்கள் கவனமாக இருப்பது நல்லது. நடப்பவைகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நேர்மறை அணுகுமுறை தேவை.

பிழைகளின்றி பணியாற்ற சிறிது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பணிகளை திட்டமிடுங்கள். மனதை ஒருமுகப்படுத்தி பணியாற்றுவதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும்.

பணி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் உங்கள் மனதில் இருக்கும். அதைப்பற்றி நீங்கள் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையுடன் அதைப்பற்றி கலந்தாலோசிப்பதன் மூலம் அதிலிருந்து விடுபடுவ தற்கு வழி கிடைக்கும்.

இன்று அதிக அளவில் செலவுகள் காணப்படும். செலவுகளை நன்கு கண்காணிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.



### கடகம்

நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி மிகவும் சிந்தித்து கனவுகாண் பீர்கள். இது எல்லாரிடத்திலும் இருப்பது இயல்பு. இன்று மிகவும் முக்கியமான முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியைப் பொறுத்தவரை புகழ் தரும் பலன்கள் காத்திருக்கின்றன. உங்கள் பணிக்கு கிடைத்த அங்கீகாரம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்துகொள்வதற்கு மிகவும் ஏற்ற நாள். உங்களது சமநிலையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் தேவை களுக்கு செலவழிக்க போதிய பணம் உங்களிடம் இருக்கும்.

உங்களை திடமாக வைத்திருப்பதற்கு தேவையான பலத்தை பெறுவீர்கள். பாடல்கள் கேட்பதன் மூலம் சிறந்த முறையில் உணர்வீர்கள்.



### சிம்மம்

இன்று கூடுதல் பலன் பெறுவீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு திட்டமிடுங்கள். இன்று நீங்கள் எடுக்கும் சிறிய முயற்சிகள் கூட உங்களுக்கு சிறந்த பலன்களைத் தரும்

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் மிகுந்த அன்பை வெளிப்படுத்து வீர்கள். உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள இது உதவும்.

உங்கள் கடின உழைப்புக்கு இன்று உயர்வு கிடைக் கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மற்றும் உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.



### கன்னி

இன்று மன அழுத்தத்துடன காணப் படுவீர்கள். சிறந்த பாடல் மற்றும் சிறந்த திரைப்படங்கள் உங்கள் மன துக்கு மகிழ்ச்சியை அளிக்கும் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே போகும். எனவே, பணிகளை திட்டமிட்டு அதன் படி செயலாற்றுவது உங்களுக்கு நல்லது. உங்கள் துணையுடன் உங்கள் அணுகுமுறையில் விஷயங்களை எளிதாக்குங்கள். அவருடன் இயன்ற அளவு மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள்.

பணப்புழக்கத்தைப் பொறுத்தவரை கட்டுப்பாடு சாத்தி யப்படும். கையிருப்பு பணத்தில் கவனமாக இருங்கள்.

தலைவலியால் அவதிப்பட நேரிடலாம். தியானம் மேற்கொள்வது மிகவும் உதவிகரமாக இருக்கும்.



### துலாம்

இன்று வெளியிடங்களுக்கு செல்வ தின் மூலம் உங்கள் கவனத்தை மகிழ்ச்சியின் பக்கம் திசை திருப்ப முடியும். இது இன்று அவசியம் தேவை. இன்று கூலாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும். மிக முக்கியமாக நீங்கள் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டியது அவசியம்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். தேவை யற்ற செலவுகள் ஏற்படலாம். எனவே செலவைக் கட்டு-ப்படுத்த வேண்டியது அவசியம்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தொண்டை எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.



### விருச்சிகம்

இன்று சிறந்த முன்னேற்றமான நாள். இன்று உங்களின் பரந்த பார்வை இன்றைய நாளை சிறந்ததாக்கும். தடை களைத் தகர்த்தெறிவீர்கள்.

மிகவும் உண்மையாகப் பணியாற்று வீர்கள். மனமாரச் செய்யும் உங்கள் பணிகளை நீங்கள் குறித்த நேரத்தில் முடித்துக் கொடுத்து உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகவும் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பரா மரிக்க இது உதவும்.

இன்று பணவரவு அதிகமாகக் காணப்படும். வங்கியில் கணிசமான இருப்பை உங்களால் பராமரிக்க முடியும்.

ஆரோக்கியம் சிறந்து விளங்கும். யோகா முறையாக மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.08.2023




இன்று முன்னேற்றகரமான நாள். இன்று ஆற்றலும் உற்சாகமும் காணப்பட்டு அதன்மூலம் வளர்ச்சி கிடைக்கும். எல்லாவிதத்திலும் சிறந்த செழிப்பான நாள்.

புதிய பணிக்கான வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். வேலைகளை அனுபவித்து செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்ல அன்பை பராமரிப்பீர்கள். இது உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும்.

இன்று பணவரவு அதிக அளவில் காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். நிறைந்த மகிழ்ச்சி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். பிரார்த்தனை அல்லது தெய்வீகப் பாடல்கள் கேட்பதில் உங்கள் கவனத்தை செலுத்துவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் தொழிலைப் பொறுத்தவரை இன்று கடினமான சவால்களை சந்திப்பீர்கள். நீங்கள் உங்கள் பணியில் முதலிடத்தை அடைவதற்கு உயர்ந்த வகையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் வேலையில் உண்டான பதற்றத்தை உங்கள் துணையிடம் காட்டாதீர்கள். அவ்வாறு இருப்பது உறவுக்கு நல்லது.

வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். உங்கள் குடும்ப நலனுக்காக பணத்தை அதிக அளவில் செலவு செய்வீர்கள்.

செரிமானக் கோளாறுகள் மற்றும் கால்வலி போன்ற உபாதைகள் காணப்படலாம்.




உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டிய நாள். அதிகமாக சிந்திப்பதை தவிர்க்கவும். வெளியிடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் மன அழுத்தங்களை குறைக்கலாம்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை நன்றாக திட்டமிட வேண்டும். முறையாக அட்டவணையிட்டு பணிகளை செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்துகொள்வதை தவிருங்கள். நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியுடன் இருக்க இது உதவும்.

இன்று போதிய அளவு பணம் மட்டுமே வைத்திருப்பீர்கள். அதிக அளவு பணம் செலவழிப்பதை தவிர்க்கவும். அத்தியாயவசியமான தேவைகளுக்கு மட்டும் செலவழியுங்கள்.




இன்று நீங்கள் நினைத்த செயல்களை குறித்த நேரத்தில் முடிக்கக் கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த நாள். உங்கள் முகத்தில் காணப்படும் உற்சாகம் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

உங்கள் திறமையான பணிக்கான பாராட்டு பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்பும் அதனால் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள் மற்றும் உங்கள் செயலிலும் அதை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் துணையுடன் நிறைவான நல்லுறவுக்கு வழி வகுக்கும்.

உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு நீங்கள் வசதியாக இருப்பீர்கள். கூடுதல் சேமிப்பிற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன.

இன்று மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.






# கடவுச்சீட்டு விண்ணப்பிப்பதற்கு இலங்கை தூதரகம் செல்ல விடுங்கள்!

## - முருகனுக்காக நளினி மனு தாக்கல்



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ள முருகன் கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னைக்கு சென்றுவர அனுமதி வழங்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்த நளினி, முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம், கடந்த 2022 ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்தது. இலங்கை நாட்டு குடியுரிமை பெற்ற முருகன் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் முருகன் சார்பில் அவரது மனைவி நளினி தாக்கல் செய்த மனுவில், சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் சொந்த நாட்டுக்கு செல்லும் வரை வெளியே செல்லக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு சிறைகளை விட முகாமின் நிலை மற்றும் சூழல் கடுமையாக உள்ளன.

லண்டனில் வசிக்கும் மகளுடன் இருவரும் சேர்ந்து வாழ விரும்புகிறோம். தற்போதைய நிலையில் முருகனுடைய சொந்த நாடான இலங்கையில் அவரது உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. எனவே அவர் அங்கு செல்ல முடியாது.

எனவே சர்வதேச கடவுச்சீட்டு பெற சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு செல்வதற்காக சிறப்பு முகாமில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். அங்கு சென்றுவர தங்களுக்கு பொலிஸ்பாதுகாப்பு வழங்க தமிழக அரசுக்கும், வெளிநாட்டினர் பதிவு மண்டல அலுவலருக்கும் உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எம். சுந்தர் மற்றும் ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. இதன்போது குறித்த வழக்கை இந்த அமர்வு விசாரிக்க வேண்டுமா? அல்லது தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா? என தலைமை நீதிபதியின் உத்தரவை பெறும்படி, நீதிமன்ற பதிவுதுறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## தமது இந்திய ஒற்றுமை யாத்திரையின் 2 ஆம் கட்டத்தை தொடங்குகிறார் ராகுல்



காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை யாத்திரையின் 2 ஆவது யாத்திரையை குஜராத்தில் தொடங்கி மேகாலயா வரை நடத்த இருப்பதாக மகாராஷ்டிரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் நானா படோல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை யாத்திரையின் 2 ஆவது பாகத்தை மேற்கொள்ளவிருக்கிறார். குஜராத்தில் தொடங்கி மேகாலயா வரை இந்த யாத்திரையை அவர் நடத்தவுள்ளார்.

ராகுல் இந்த யாத்திரையை மேற்கொள்ளும் போது மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் தத்தம் பகுதிகளில் யாத்திரைகளை ஒருங்கிணைத்து நடத்தவுள்ளனர் என்று தெரிவித்தார்.

இந்திய ஒற்றுமை யாத்திரையின் முதல் பகுதி கடந்த செப்டம்பர் 7 ஆம் திகதி கன்னியாகுமரியில் தொடங்கி கடந்த ஜனவரி 30 ஆம் திகதி ஸ்ரீநகரில் நிறைவு பெற்றது. 12 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் 3,970 கிலோ மீட்டர் ராகுல் காந்தி நடந்தார். 130 நாட்கள் இந்தப் பயணம் நீடித்திருந்தது.

## சந்திராயன் 3: முதல் புகைப்படம் வெளியிடப்பட்டது!



நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் பிரவேசித்துள்ள சந்திராயன் – 3 விண்கலம், படம்பிடித்து அனுப்பிய நிலவின் மேற்பரப்பு காட்சிகள் அடங்கிய முதல் புகைப்படத்தை இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பகிர்ந்துள்ளது.

நிலவின் தென் துருவத்துக்கு அருகே தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சுமார் 615 கோடி இந்திய ரூபாய் செலவில் வடிவமைத்த சந்திரயான்-3 விண்கலம் கடந்த ஜூலை 14 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து விண்கலத்தை இயக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பாகிஸ்தானில் கண்ணிவெடி தாக்குதலில் 7 பேர் உயிரிழப்பு!



பாகிஸ்தானில் கண்ணிவெடியில் வாகனம் சிக்கி வெடித்துச் சிதறியதில் 7 பேர் பலியாகியுள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணம் பஞ்ஜ்குர் மாவட்டத்தில் நடந்த ஒரு திருமண விழாவில் பங்கேற்று விட்டு சிலர் வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் வாகனம் சிக்கியது. இதனால் வாகனம் வெடித்துச் சிதறியுள்ளது.

இந்த தாக்குதலில் 7 பேர் பலியாகினர். உயிரிழந்தவர்களில் யூனியன் கவுன்சில் தலைவர் ஒருவரும் அடங்குவதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பல்கத்தார் யூனியன் தலைவர் இஷ்தியாக் யாகூப் மற்றும் சிலர் ஒரு திருமண விழாவில் கலந்து கொண்டு விட்டு திரும்பிய போது அவர்கள் சென்ற வாகனத்தை இலக்கு வைத்து கண்ணிவெடிகளை மர்ம நபர்கள் வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுடன் பலூச் விடுமுறை முன்னணி எனும் அமைப்பிற்கு தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## நைஜரில் களமிறங்கிய அமெரிக்கா!



நைஜரின் இராணுவதலைவர்களுடன் அமெரிக்காவின் பிரதிநிதியொருவர் நேரடி பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுலாண்ட் நைஜரின் இராணுவதலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். மிகவும் வெளிப்படையான பல சந்தர்ப்பங்களில் கடினமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என அமெரிக்க பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. சதிப்புரட்சிகளில் ஈடுபட்டவர்கள் மீண்டும் அரசமைப்பினை ஏற்படுத்த விரும்பினால் அமெரிக்கா அவர்களுக்கு உதவ தயார் என தெரிவிக்கப்பட்டதாக நுலாண்ட் தெரிவித்துள்ளார்.

நைஜரில் ஆட்சியை கைப்பற்றியவர்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக ரஷ்யாவின் வாக்னர் குழுவின் உதவியை நாடியுள்ளமை குறித்த தகவல்கள் குறித்து கரிசனை வெளியிட்டதாக விக்டோரியா நியுலாண்ட் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் வாக்னர் குழு உள்ளே நுழைந்ததும் இறைமைக்கு ஏற்படக்கூடிய ஆபத்தினை நன்கு உணர்ந்திருப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## இரண்டாம் உலக யுத்த குண்டு மீட்பு: ஜேர்மனியில் மக்கள் வெளியேற்றம்!






ஜேர்மனியில் இரண்டாம் உலக யுத்த காலத்து குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதால் சுமார் 13 ஆயிரம் பேர் தமது வீடுகளிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டனர்.

டுசெல்டோர்வ் நகரிலுள்ள மக்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஒரு தொன் எடையுள்ள குண்டு ஒன்று டுசெல்டோர்வ் நகரிலுள்ள மிருகக் காட்சி சாலைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாக தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பின்னர் இந்த குண்டுசெயலிழக்கச் செய்யப்பட்டது.

இரண்டாம் யுத்தம் முடிவடைந்து 78 வருடங்கள் கடந்துள்ள போதிலும், ஜேர்மனிய நகரங்கள் பலவற்றில் வெடிக்காத குண்டுகள் அடிக்கடி மீட்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு பிராங்பர்ட் நகரில் 1.4 தொன் எடையுள்ள குண்டு கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 65 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை, கடந்த வருடம் மியூனிக் நகரில் இரண்டாம் உலக யுத்த காலத்து குண்டு ஒன்று வெடித்ததால் நால்வர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.